**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 26/2021**

**2023** ம் வருடம் பிப்ரவரி திங்கள் 28 ம் நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு. A.கந்தசாமி இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு. பவுன்ராஜ் கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>முதல்விசாரணை</u>

1. நான் இவ்வழக்கின் வாதியின் பவர் ஏஜெண்ட் ஆவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக இன்று நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

2. வாதி எனக்கு 28.09.2021 ம் தேதியன்று வழக்கு தாக்கல் செய்ய எனக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகும்.

3. 03.06.1991 ம் தேதியன்று வாதிக்கு 1 ம் பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவண எண். 377/1991 ன் அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. தாவா சொத்துக்கு எடுக்கப்பட்ட வில்லங்கச்சான்றின் கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. 14.09.2015 ம் தேதியன்று 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் எண். 2129/2015 ன் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

6. 06.11.2015 ம் தேதியன்று 2 ம் பிரதிவாதி தாவா சொத்துக்களையும், இதர நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் பொறுத்து 3 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த பவர் பத்திரத்தின் பொது அதிகார ஆவணம் எண். 2607/2015 ன் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

7. 26.11.2015 ம் தேதியன்று தாவா சொத்து மற்றும் இதர நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 3 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் எண். 2752/2015 ன் கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகும்.

8. 08.01.2016 ம் தேதியன்று 4 ம் பிரதிவாதி 5 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த குத்தகை ஆவணம் எண். 22/2016 ன் கணினி நகல் வா.சா.ஆ.7 ஆகும்.

9. 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு 29.04.2016ம் தேதியன்று எழுதிக் கொடுத்த குத்தகை துணை ஆவணம் எண்.449/2016 ன் கணினி நகல் வா.சா.ஆ.8 ஆகும்.

10. 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு 30.01.2017ம் தேதியன்று எழுதிக் கொடுத்த அடமான ஆவணம் எண்.55/2017 ன் கணினி நகல் வா.சா.ஆ.9 ஆகும்.

11. 23.12.2019ம் தேதியன்று 8ம் பிரதிவாதி 9ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த திருத்தப்பட்ட அடமான ஆவணம் எண்.1641/2019 ன் கணினி நகல் வா.சா.ஆ.10 ஆகும்.

12. தாவா சொத்துக்களுக்கு தற்போது 6ம் பிரதிவாதி பெயரில் தாக்கலாகி வரும் பட்டாவின் இணையதள நகல் வா.சா.ஆ.11 ஆகும்.

13. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.